Impact Factor (SJIF): 6.092 E-ISSN: 2583-1615

International Journal of Research in Academic World

Received: 20/February/2023 IJRAW: 2023; 2(3):111-114 Accepted: 28/March/2023

# தமிழ்ச்சமூக அலைகுடி மரபில் அகவுநரின் இருப்பும் இல்லாமையும்

*[1]முனைவர் பி. பாலசுப்பிரமணியன்

*[1]உதவிப் பேராசிரியர் & துறைத்தலைவர் (சுயநிதிப்பிரிவு), தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை, தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர், தமிழ்நாடு, இந்தியா.

**சுருக்கம்**

தமிழ்மொழி சொல் வளமுடையது. பண்டைத் தமிழிலக்கியங்களிலிருந்து சமகால இலக்கியம் வரை தமிழில் சொற்கள் விரவிக் கிடக்கின்றன. சொற்களைத் தேடிக் கண்டடைவதும் சொல்லின் பொருளில் ஆழங்கால் படுதலும் இன்றியமையாததாகும். ‘கடிசொல்லை இல்லை காலத்துப் படினே’ என்ற தொல்காப்பியரின் கூற்றைப் போல எல்லாக் காலத்துக்குமான சொல் என்பதொன்றும் இல்லை. காலத்திற்கேற்றவாறு புதிய சொற்கள் உருவாகின்றன. அந்தச் சொற்களுக்கான பொருள்களும் மாறுபடுகின்றன. ஒரு சொல் வேறொரு சொல்லாகத் திரிந்து, ஒரே பொருளைத் தரும் சூழலையும் காண முடிகிறது. சொற்களாலும் மொழியாலும் தான் இந்த இலக்கிய உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. அதனடிப்படையில் தமிழ்ச்சமூக அலைகுடி மரபில் ‘அகவுநர்’ என்ற சொல்லின் பொருள் குறித்தும் சங்க இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள அகவுநர் பற்றிய இருப்பு குறித்தும் இக்கட்டுரை ஆராய்கிறது.

**முக்கிய வார்த்தைகள்:** அகவவர்ணா, தமிழ் சமூகம், அகநானூறு-அகவுநர்

## அறிமுகம்

அகவுநர் என்ற சொல் சங்க இலக்கியத்தில் ஆறு பாடல்களில் இடம் பெற்றுள்ளது. அகநானூற்றில் 97, 113, 152, 208, 249 ஆகிய ஐந்து பாடல்களிலும் பரிபாடல் 15 ஆம் பாடலிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. பாண்குடிச் சமூகத்தில் ஒருவராக அகவுநர் அடையாளப்படுத்தப்பட்டாலும் பாணர்களைப் போன்று அதிகப் பாடல்களில் இவர்களைப் பற்றியக் குறிப்புகள் இடம் பெறவில்லை. பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் அலைகுடிகளாக வாழ்ந்த பல கலைஞர்களுள் இவர்களும் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அகவுநர் பாண் சமூகத்தைச் சார்ந்த அலைகுடிகள் என்றாலும் அவர்களைக் குறித்து ஆய்வதும் தேவையான ஒன்றாகக் கருத இடமிருக்கிறது.

“கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்”

என்று தொல்காப்பியர் (பாலசுந்தரம். ச. (உ.ஆ.), 2012) குறிப்பிடுகிற போது, அகவுநர் என்ற கலைஞர் பெயர் இடம் பெறவில்லை. கூத்தர்-நாடகக் கலைஞர், பாணர்-இசைக்கலைஞர், பொருநர்-பாடலிலும் நடித்தலிலும் வல்லவர், போர்க்களத்தைச் சிறப்பித்துப் பாடுபவர், விறலி-ஆடல், பாடல், நடித்தல் கலைகளில் வல்ல பெண் என்று உரையாசிரியர்கள் விளக்கம் அளிப்பர். மேற்கண்ட இந்த நான்கு கலைஞர்கள் தவிர பிற கலைஞர்கள் பற்றியக் குறிப்புகள் பாடல்களில் குறைவாக இருப்பதை அறிய முடிகிறது. பிற கலைஞர்கள் அடையாளப்படுத்தாமைக்கான காரணம் குறித்தும் ஆராய வேண்டிய தேவையிருக்கிறது. ஒரு வேளை தொகுக்கப்படுகிற போது விடுபட்டிருக்கலாம். இல்லையெனில் பேரரசு உருவான காலத்தில்

சிறு கலைஞர்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டிருக்கலாம்.

தொல்சமூகத்தில் வாழ்ந்துள்ள இந்தக் கலைஞர்களை, “நாட்டின் பூர்வகுடிகளான இவர்கள் அலைகுடிகள், காலோடிகள் என அழைக்கப்பட்டு வந்துள்ளனர். நிலைகுடிகளுக்குக் கலைச்சேவை செய்து வந்துள்ளனர். இவர்கள் ஐந்து நிலங்களிலும் பயணித்திருக்கிறார்கள்” என்கிறார் பேசில் சேவியர் (சி.பேசில் சேவியர், 2021).

“பாணர்கள் வாய்மொழிக்கலையில் சிறந்துள்ளனர். பாணர் சமூகத்தைச் சேர்ந்தோராக அகவுநர், கோடியர், கண்ணுளர், பொருநர் ஆகியோரைக் குறிப்பிடுவர். அக்கலைஞர்கள் தங்களது தனிப்பட்ட கலை முயற்சியால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களின் வாழ்க்கை முறை அலைந்து திரியும் நாடோடி வாழ்க்கையாக இருந்துள்ளது” என்று ஆய்வாளர் தமிழ்மணி (தமிழ்மணி, 2010) குறிப்பிடுவார்.

“சங்க காலத்தில் பாணர், பொருநர், விறலியர், பாடினியர், கூத்தர், அகவுநர் போன்ற நாடோடிக் குழுக்கள் இருந்தன என்பதைச் சங்க இலக்கியங்கள் வழி அறியப்படுகிறது. இவர்கள் குறவர், எயினர், ஆயர், உழவர், பரதர் போன்ற நிலைகுடிகளின் கொடையில் அலைகுடிகளாக வாழ்ந்தனர். வீரயுக அலைகுடிகளான பாணர் சமூகத்தில் மட்டும் துடியர், கோடியர், வயிரியர், கண்ணுளர் போன்ற பதினேழு வகைக் குடிகள் இருந்தன” எனப் பக்தவத்சல பாரதி (பக்தவத்சல பாரதி, 2015) குறிப்பிடுவார்.

“பல்வேறு கலைத்தொழிலில் ஈடுபட்ட பாண் சமூகத்தார் பாணர், கூத்தர், பொருநர், அகவுநர், இயவர், வயிரியர், கண்ணுளர் முதலான எட்டுக்கும் மேற்பட்ட குழுக்களாக வேறுபட்டு நிற்கின்றனர். இக்கலைச் சமூகத்தாரின் வாழ்வியல் பாங்கும் பொருளாதார நிலையும் சில பொதுமைகளைக் கொண்டிருப்பதால் இவர்களைப் பாண் சமூகத்தார் என்று சுட்டலாம். ஆனால், ஒவ்வொரு சமூகத்தாரும் தாம் செய்யும் தொழிலால் வேறுபட்டுக் காணப்படுகின்றனர்” என்பார் ராஜ்கௌதமன் (ராஜ் கௌதமன், 2018).

“சங்க நூல்களில் பாடுநர்களாகப் பாணர், பொருநர், அகவுநர், புலவர், கோடியர், வயிரியர், கண்ணுளர், விறலியர் அறியப்படுகின்றனர். அகவு-கூவி அழைத்தல். அவர்கள் தங்கள் பாடல்களை எவ்வாறு எடுத்துரைத்தனர் என்பதை இச்சொல் உணர்த்துகிறது” என்கிறார் கோ. பழனி (கோ. பழனி, 2014).

இவ்வாறு பாண்சமூகத்தைப் பற்றியும் அகவுநர் பற்றியும் பல்வேறு கருத்துகள் நிலவி வருகின்றன. இவையெல்லாம் ஆய்வுக்குரியவைகளாக அமைந்திருக்கின்றன.

**அகநானூறு-அகவுநர்**

பாலைநில வழி பொருள்வயிற் சென்ற தலைவனைப் பிரிந்து வாடும் தலைவி, மாலை நேரமாகிவிட்டது, அதனால் தமது துணையை அழைக்கும் குயிலின் குரல் கேட்கிறதே? நான் என்ன செய்வேன் என்று தோழியிடம் புலம்பித் தவிக்கிற மாமூலனார் பாடிய 97 ஆம் பாலை நிலப் பாடல் இது.

“இருங்கழை இறும்பின் ஆய்ந்து கொண்டறுத்த
நுணங்குகண் சிறுகோல் வணங்கிறை மகளிரொ
டகவுநர்ப் புரந்த அன்பின் கழல்தொடி
நறவுமகிழ் இருக்கை நன்னன் வேண்மான்”

என்ற பாடலில் அகவுநர் (ந.மு.வேங்கடசாமி நாட்டார், ரா.வேங்சடாசலம் பிள்ளை (உ.ஆசி.), 1962) பற்றியக் குறிப்பு உள்ளது. பெரிய மூங்கில்கள் விளைந்திருக்கின்ற சிறு காட்டில் ஆராய்ந்து அறுத்திட்ட சிறிய கணுக்களையுடைய, நுண்ணிய கோலினைக் கொண்டு, வளைந்த முன் கையினையுடைய விறலியரொடு பாணர்களைப் புரந்திடும் அன்பினைப் பெற்றவன் நன்னன் வேண்மான் என்ற செய்தி இடம் பெற்றுள்ளது. அகவுநர் என்பதற்கு உரையாசிரியர் பாணர் என்று பொருள் தருகிறார். மூங்கிலால் செய்யப்பட்ட நுண்கோலை கையில் வைத்திருக்கும் கலைஞர், இவருடன் விறலியரும் பயணித்திருக்கின்றனர். கலைஞர்களின் அன்பைப் பெற்றவன் நன்னன் என்று பதிவு செய்வதன் வழி கலைஞர்கள் சமூகத்தில் மதிக்கப்பட்டவர்களாகவும் கொண்டாடப்பட்டவர்களாகவும் இருந்திருக்கின்றனர் என அறிய முடிகிறது. கலைஞர்களின் உடனான குறுநில மன்னனின் அன்பு போற்றுதற்குரியது. அகவுநர் என்பவர் பாண்சமூகத்தில் உள்ள ஒரு தனித்த அலைகுடி என அறிந்தாலும் உரையாசிரியர்கள் அவர்களின் தொழிலை, செயலைத் தனித்து அடையாளப்படுத்தவில்லை.

தலைவன் பொருள் தேடச் சென்றிருக்கிறான். என் உயிர் அவனிடம் சென்று விட்டது. என் உடம்புதான் இங்கே கிடக்கிறது என்று தலைவி தோழியிடம் கூறுவதாக அமைந்த இந்தப் பாலைநிலைப் பாடலைப் (113) பாடியவர் கல்லாடனார். கோசர்களின் பெருமகனாக விளங்குபவன் அஃதை. இவன் கூத்தர்களைக் கொண்டாடும் தலைவனாய் இருந்தான் என்பதை,

“புன்தலை மடப்பிடி அகவுநர் பெருமகன்
அமர்வீசு வண்மகிழ் அஃதைப் போற்றி”

என்ற பாடல் (ந.மு.வேங்கடசாமி நாட்டார், ரா.வேங்சடாசலம் பிள்ளை (உ.ஆசி.), 1962) குறிப்பிடுகிறது. அகவுநர் என்பவரை உரையாசிரியர்கள் கூத்தர் என்று சுட்டியிருப்பதைக் காணமுடிகிறது. இதன் வழி இவர்கள் ஆடுகிறவர்கள் என்று அறியலாம். ஆனால், அகவுநரைக் கூத்தர் என்று அழைப்பது சரிதானா? என்ற கேள்வியும் இருக்கிறது. சென்ற பாடலில் பாணர் என்று குறிப்பிடப்பட்டுள்ளதையும் அறிய முடிகிறது. இந்தப் பாடலிலும் அஃதை என்ற குறுநிலத் தலைவனைச் சார்ந்து கலைஞர்கள் வாழவேண்டிய கட்டாயம் இருந்துள்ளது என்பதையும் புரிந்து கொள்ள வாய்ப்பிருக்கிறது. அகவுநர் பெருமகன் எனப் பொருள் கொண்டு அவர்களைச் சமூகம் மதித்துப் போற்றியிருக்கிறது என்பதாகவும் அறிய முயற்சிக்கலாம்.

இன்பம் தந்துவிட்டுத் திரும்பிப் போகிறாள் தலைவி. அவளது கூந்தல் அழகும் தோள் மணமும் என்னைத் துன்பத்தில் ஆழ்த்துகின்றன என்று தலைவன் தனக்குள் பேசிக்கொள்வதாக, அகநானூற்றில் பரணர் பாடிய 152 ஆம் குறிஞ்சி நிலப் பாடல் அமைந்துள்ளது.

”நுண்கோல் அகவுநர்ப் புரந்த பேரிசைச்
சினம்கெழு தானைத் தித்தன் வெளியன்”

என்ற பாடலில் அகவுநர் (பொ.வே. சோமசுந்தரனார் (உ.ஆ.), 1974) பற்றிய குறிப்பு இடம் பெற்றுள்ளது. கையில் நுணுக்கமான கோலை வைத்துக் கொண்டு குறிசொல்லிப் பாடும் அகவுநர் மக்களைப் பேணிப் பெரும் புகழ் கொண்டவன், சினங் கொண்ட பெரும்படை உடைய தித்தன் வெளியன். இப்பாடல் வழி அகவுநரை நுண்கோல் கொண்டு குறி சொல்பவர்கள் என்று பதிவு செய்திருப்பதையும் அறிய முடிகிறது.

“நுண்ணிய யாழ் நரம்பினை வருடிப் பாடுகின்ற பாணர்களைப் பெரிதும் புரந்தமையால் உண்டான பெரிய புகழையும் வெகுளிமிக்கப் படைகளையுமுடைய தித்தன் வெளியன் என்னும் வேந்தன்” என்று உரை விளக்கம் தருகிறார் பொ.வே. சோமசுந்தரனார் (பொ.வே. சோமசுந்தரனார் (உ.ஆ.), 1974). மேற்கண்ட பொருளிலிருந்து இது முற்றிலும் வேறுபட்டதாக இருக்கிறது. அகவுநர் குறிசொல்பவர்” (பொ.வே. சோமசுந்தரனார் (உ.ஆ.), 1974) என்று சோமசுந்தரனார் பொருள் கூறவில்லை என்பதையும் கவனிக்க வேண்டியிருக்கிறது.

இரவுக்குறிக்கண் வந்து தலைவியைப் புணர்ந்து நீங்கும் தலைவன் தலைவியை நினைந்து பாராட்டி, தமது நெஞ்சிற்குச் சொல்லியதாக அகநானூறு 208 ஆம் குறிஞ்சிநிலப் பாடல் அமைகிறது. பரணர் இப்பாடலைப் பாடியிருக்கிறார்.

“நுண்கோல் அகவுநர் வேண்டின்
வெண்கோட்டு
அண்ணல் யானை ஈயும் வண்மகிழ்
வெளியன் வேண்மான் ஆஅய் எயினன்”

என்ற பாடலில் நுண்கோல் அகவுநர் (பொ.வே. சோமசுந்தரனார் (உ.ஆ.), 1974) என்ற குறிப்பு இடம் பெற்றுள்ளது. “நுண்ணிய நரம்பினை வருடிப் பாடுகின்ற பாணர்கள் பரிசில் அவன்பால் வேண்டின் வெள்ளிய மருப்பினையுடைய தலைமைத் தன்மை வாய்ந்த யானையையும் பரிசிலாக வழங்கும் வள்ளன்மையையும் மகிழ்ச்சியையும் உடைய அருள் பொருந்திய வாழ்க்கை உடைய வெளியன் வேண்மான் ஆயிஎயினன் ஆவான்” என்கிறார் பெருமழைப்புலவர் (பொ.வே. சோமசுந்தரனார் (உ.ஆ.), 1974).

இதிலிருந்து இசைக்கருவி கொண்டு பாடுகிறவர் அகவுநர் என்ற கருத்தைப் பெறமுடிகிறது.

பொருள்வயிற்கண் தலைவியைப் பிரிந்து சென்றான் தலைவன். அதனால் வேறுபட்ட தலைவியின் ஆற்றாமை கண்டு, தோழி அவளுடன் உரையாடுகிறாள். தோழிக்குத் தலைமகள் பதில் கூறுவதாக, நக்கீரர் பாடிய 249 ஆவது பாலைநிலப் பாடல் இது.

“.......... ......... ......... வள்வார்
விசிபிணித் தியாத்த அரிகோற் றெண்கிணை
இன்குர லகவுநர் ............ ................”

என்ற பாடலில் அகவுநர் (பொ.வே. சோமசுந்தரனார் (உ.ஆ.), 1974) பற்றியப் பதிவு உள்ளது.

வலிமையுடைய வாரினால் இழுத்துக் கோர்த்துக் கட்டிய அரித்து ஒலி உண்டாகும் கோலை கொண்ட, தெளிந்த ஓசையை உடைய கிணை என்னும் தோல் கருவியின் ஊடே இனிய தமது குரலாலே பாடுகின்ற கிணைவர் வந்து இரந்தால் அரச வள்ளல் முசுண்டை, உணவுப் பொருள்களைத் தேரில் ஏற்றி வழங்குவான். தந்தங்களுக்குப் பொன்னணி பூட்டிய யானைகளை ஊற்றுநீர் சுரப்பது போல வழங்குவான் எனப் பாடற்பொருள் குறிப்பிடுகிறது. கிணையிசை முழக்கி இனிய குரலில் பாடல் பாடும் அகவுநர் என்பதை மேற்கண்ட பாடல் வழி அறிய முடிகிறது.

## பரிபாடல்-அகவுநர்

எட்டுத்தொகையில் பிற்காலத்து எழுந்த நூலாகக் கருதப்படுகின்ற பரிபாடலில் திருமால் பற்றிப் பாடப்பட்டுள்ள பதினைந்தாவது பாடல் அகவுநர் குறித்துப் பதிவு செய்திருக்கிறது.

"பகர் குழல் பாண்டில் இயம்ப அகவுநர் நா நவில் பாடல் முழவு எதிர்ந்தன்ன"

**அட்டவணை 1:** என்ற பாடலுக்குப் பொருள் விளக்கம் தருகின்ற உரையாசிரியர் அகவுநர் வாய்ப்பாட்டுப் பாடுபவர் (பொ.வே. சோமசுந்தரனார் (உ.ஆ.), 1975) என விளக்கமளிக்கிறார்.

| வ.எ. | நூல் | பா.எ. | பாடலடிகள் | நிலம் | பாடிய புலவர் | பொருள் |
|---|---|---|---|---|---|---|
| 1. | அகநானூறு | 97 | நுணங்கு கண் சிறுகோல் வணங்கிறை அகவுநர்ப் புரந்த | பாலை | மாமூலனார் | நுண்ணிய கோல் கொண்ட அகவுநர் |
| | | 113 | புன்றலை மடப்பிடி அகவுநர் பெருமகன் | பாலை | கல்லாடனார் | அகவுநரைப் பெருமகன் என அழைத்தல் |
| | | 152 | நுண்கோல் அகவுநர்ப் புரந்த பேரிசை | குறிஞ்சி | பரணர் | நுண்ணிய யாழ் நரம்பினை வருடிப் பாடுகின்ற பாணர் |
| | | 208 | நுண்கோல் அகவுநர் | குறிஞ்சி | பரணர் | குன்றம் பாடி யானையைப் பரிசாகப் பெற்ற நுண்கோல் அகவுநர் |
| | | 249 | வள்வார் விசி பிணித்து யாத்த அரிகோல் தெள்கிணை இன்குரல் அகவுநர் | பாலை | நக்கீரனார் | கிணை என்னும் தோற்கருவி இசைத்த அகவுநர் |
| 2. | பரிபாடல் | 15 | அகவுநர் நா நவில் பாடல் முழவு எதிர்ந்தன்ன | - | இளம்பெரு வழுதியார் | வாய்ப்பாட்டுப் பாடும் அகவுநர் |

## மதிப்பீடு

- அகவுநர் என்போர் கிணை, பறை, குழல், முழவு, யாழ் (தோற், நரம்புக் கருவிகள்) போன்ற இசைக்கருவிகளை வாசித்தவர்களாக இருந்திருக்கின்றனர்.
- அகவுநர் துணைவியார் அகவன் மகளிர் நுண்கோல் கொண்டு குறி சொல்பவர்களாக அடையாளப்பட்டிருக்கின்றனர்.
- அரசர்கள், குறுநில மன்னர்கள், வள்ளல்களிடம் இசைக்கருவிகளை வாசித்தும் பாடல் பாடியும் பரிசுகளைப் பெற்றுள்ளனர்.
- அரிதிப் பெரும்பான்மையான அலைகுடிச் சமூகம் நிலை குடிச் சமூகத்தினருக்குக் கலைச் சேவை செய்திருக்கின்றனர்.
- பாணர்கள் அடையாளப்பட்ட அளவிற்கு மற்ற கலைஞர்கள் அடையாளப்படவில்லை. அதற்கான காரணத்தை ஆய்வுக்குட்படுத்த வேண்டியத் தேவையிருக்கிறது.
- அகவுநர் போன்ற குடிகள் சங்க காலகட்டத்திற்குப் பிறகு எந்தப் பெயரில் அழைக்கப்பட்டு வந்தனர் என்ற பதிவும் இல்லை. இவர்கள் அனைவரையும் ஒட்டுமொத்தமாகக் கலைஞர்கள் எனக் குறிப்பிடுவதும் சாத்தியமில்லை. இவர்கள் ஓரிடத்தில் தங்காமல் பயணித்ததற்கான காரணத்தையும் தேட வேண்டியிருக்கிறது.

## குறிப்புகள்


1. மாதையன், பெ., 2007, சங்க இலக்கியச் சொல்லடைவு, முதற்பதிப்பு, பதிப்புத்துறை, தமிழ்ப்பல்கலைக்கழக வெளியீடு, தஞ்சாவூர்-613010.
2. வேங்கடசாமி நாட்டார், ந.மு., வேங்கடாசலம் பிள்ளை, ரா., 1961, அகநானூறு, முதற்பதிப்பு, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி-06.
3. சோமசுந்தரனார், பொ.வே. 1974, அகநானூறு (மணிமிடைப் பவளம், நித்திலக்கோவை), முதற்பதிப்பு, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி-06.
4. சோமசுந்தரனார், பொ.வே. 1975, பரிபாடல் மூலமும் உரையும், முதற்பதிப்பு, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி-06.
5. ராஜ் கௌதமன், 2018, பாட்டும் தொகையும் தொல்காப்பியத் தமிழ்ச் சமூக உருவாக்கமும், முதற்பதிப்பு, தமிழினி பதிப்பகம், 25-ஏ, தரைத்தளம், முதல் பகுதி, ஸ்பென்சர் பிளாஸா, 769, அண்ணாசாலை, சென்னை-02.
6. பக்தவத்சல பாரதி, 2015, பாணர் இனவரைவியல், முதற்பதிப்பு, அடையாளம், 1205/1, கருப்பூர் சாலை, புத்தாநத்தம்-621310.
7. பேசில் சேவியர், சி., 2021, தமிழக நாடோடிகளின் அவலங்கள் (கட்டுரை), நவம்பர் 24, இந்து தமிழ் திசை நாளிதழ்.
8. பழனி, கோ., ஜீலை 2014, பழந்தமிழ் இலக்கியத்தில் கதை தழுவிய கூத்து (கட்டுரை), உங்கள் நூலகம் மாத இதழ்.
9. தமிழ்மணி, 2010, சங்ககால நாடோடிகள் (கட்டுரை), பிப்ரவரி 14, தினமணி நாளிதழ்.
10. பாலசுந்தரம், ச. (உ.ஆ.), 2012, தொல்காப்பியம் பொருளதிகாரம் (தொகுதி மூன்று), ஆராய்ச்சிக் காண்டிகையுரை, முதற்பதிப்பு, பதிப்புத்துறை, பெரியார் பல்கலைக்கழக வெளியீடு, சேலம்-11.
11. Thomas Lehmann And Thomas Malten, 1993, A WORD INDEX FOR CANKAM LITERATURE, 2nd Edition, Institute Of Asian Studies, Chemmancherry, Chennai-19, Tamilnadu, India.